TAMIL

singaporeartmuseum
CONTEMPORARY ART IN SOUTHEAST ASIA

# HITO STEYERL: FACTORY OF THE SUN

18.5.2023 – 24.9.2023
Tanjong Pagar Distripark

## ஹிட்டோ ஸ்டையரில்: சூரிய தொழிற்சாலை

ஹிட்டோ ஸ்டையரில்
*சூரிய தொழிற்சாலை*
2015
காணொளி, LED கட்டமைப்பு, கடற்கரை நாற்காலிகள்
காணொளி: HD, ஒற்றை ஒளிவழி, 16:9 வடிவம், வண்ணம் மற்றும் ஒலி (ஸ்டிரியோ), 23 நிமிடம்

சிறப்புமிக்க இந்த முப்பரிமாணக் காணொளிப் படைப்பில், ஹிட்டோ ஸ்டையரில், தற்கால ஊடகங்களில் படங்களின் முடிவற்ற சுழற்சி நம் யதார்த்தத்தின் மீது எவ்வாறு பாதிக்கின்றது என்பதை ஆராய்கிறார். திரையின், உண்மைக்கும் புனைவுக்கும் இடையிலான வேறுபாடுகள், யூடியூப் நடன ஒளிநாடாக்கள், ஆளில்லா வானூர்திக் கண்காணிப்புக் கருவிகளின் காட்சிகள், வீடியோ ஒளிநாடா விளையாட்டுகள், புனையப்பட்ட செய்தித் துணுக்குகள், மாணவர் எழுச்சிகளின் ஆவணப்படங்கள் ஆகியவற்றின் தொகுப்பில் கரைந்துவிடுகின்றன.

டோனா ஹராவேயின் "எ சைபோர்க் மேனிஃபெஸ்டோ" (*A Cyborg Manifesto*) (1985) என்ற நூலின் "இயந்திரங்கள் சூரிய ஒளியால் உருவாக்கப்பட்டவை" என்னும் வாசகத்தினால் தூண்டப்பட்ட *சூரியன் தொழிற்சாலை*, இயங்குநிலைப் பதிவு அரங்கு (motion-capture studio) ஒன்றில், கொத்தடிமைத் தொழிலாளர்களின் கற்பனைக் கதையைக் கூறுகிறது.
அரங்கிலுள்ள ஊழியர்கள் நடனமாடுகையில், அவர்களின் அசைவுகள் செயற்கைச் சூரிய ஒளியாக மாற்றப்பட்டு, உலகளாவிய பெரிய நிறுவனங்களால் அதிவேக கணினி வழி, வர்த்தகத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. அரங்கின் LED கட்டமைப்பு, திரைக்கு அப்பாலும் விரிந்து, பார்வையாளர் மாடத்தைத் திரைப்படத்தின் மெய்நிகர் உலகுடன் இணைக்கிறது. கட்டமைப்பிற்குள் நுழையும் பார்வையாளர்கள், நடனமாடுவோரில் ஒருவராகிவிடுகிறார்கள். ஸ்டையரில் இவ்வாறு நடனக் கலைஞர்களின், நம் யதார்த்தத்திற்கு இடையிலான அணுக்கத்தை அறிவுறுத்துகிறார். கலைப்படைப்பை மிகைப்படுத்தலுக்கு அடிப்படையான சில உண்மைகளைச் சுட்டிக்காட்டுகிறார்: அனைத்துத் தகவல்களும் கண்ணாடி நுண்ணிழைக் கம்பிவடங்களின் வழி பயணிக்கும் தூய ஒளியால் உருவாக்கப்படும் நம் கட்டமைக்கப்பட்ட சமுதாயத்தில், உள்ளடக்கச் சரக்கை உருவாக்கும் உழைப்பு, மதிப்பை உருவாக்குகிறது.

*சூரிய ன் (சூரியன்) தொழிற்சாலை-* இன் கதை வடிவம் புனைந்ருவாக்கப்பட்ட ஒளிநாடா விளையாட்டாகப் படைக்கப்படுகிறது. பழைய சோவியட் யூனியனிலிருந்து கனடாவுக்குப் புலம் பெயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த விளையாட்டு ஒளிநாடா மென்பொருள் தயாரிப்பாளரான யூலியாவின் உண்மைக் கதையை அடிப்படையாகக் கொண்டு, இது புனையப்பட்டிருக்கிறது. அவர்களுடைய புதிய வீட்டின் நிலவறையில், அவரின் சகோதரர் நடனக் காணொளிகளை உருவாக்கினார். அவை இணையத்தில் பரவின. பின்னர் உயிரூட்டப்பெற்ற கற்பனைப் படக் கதாபாத்திரங்களின் நடன அமைப்பபில் பயன்படுத்தப்பட்டன. இந்த மெய்யியல்பு, புனையப்பட்ட ஒளிபரப்புகளால் சிக்கலாக்கப்படுகிறது. CERN எனப்படும் ஐரோப்பிய அணுவியல் ஆராய்ச்சிஅமைப்பின் ஆராய்ச்சி, ஒளியைவிட வேகமாகப் பயணிக்கும் ஒரு துகளை அளந்துள்ளது எனக் கூறும் அறிக்கைகள், இயங்குநிலை நடனக்காரர்களுடன் ஆளில்லா வானூர்தி மோதியது பற்றிய கதைகள் என, பொய்யான அறிக்கைகளால் சிக்கலாகியுள்ளது. சூரிய ஒளியின் ஆற்றலைப் பயன்படுத்தி, இந்த நடனக் கலைஞர்கள் ஒன்றிணைந்து, சர்வாதிகார ஆட்சிகளையும் நிறுவனங்களையும் ஒன்றுபட்டு, எதிர்த்து நிற்கக்கூடிய சாத்தியத்தைக் காட்டுகிறார்கள்.

*சூரிய தொழிற்சாலை* 2015 வெனிஸ் கலைக் கண்காட்சியில் ஜெர்மன் அரங்கில் முதன்முதலாக அரங்கேற்றப்பட்டது.

சேகரிக்கப்பட்ட கட்டுரைத் தொகுப்பை (ஆங்கிலத்தில் எழுதப்பட்டது) வாசிக்க வருடுங்கள்